**நாள் 15.02.2023.**

**OS 37/2021 வாசா2. சுந்தரரேஷ்குமார் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிதரப்பில் குறுக்குவிசாரணை**

வாதி எனக்கு நண்பர். வாதி அம்மாபேட்டை அருகில் உடையார்கோயிலில் வசிக்கிறார். வாதி பெயிண்டிங் வேலை பார்க்கிறார். வாதி பிரதிவாதிக்கு ரூ.12 இலட்சம் கொடுத்ததை நான் பார்த்தேன். பிரதிவாதியின் வீட்டில் வைத்து வாதி பணம் கொடுத்தார். வாதி அந்த பணத்தை வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தாரா என்று தெரியவில்லை. வாதி ரூ.12 இலட்சம் கொடுத்ததை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஞானசேகர் கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்ததாக முதல்விசாரணையில் சொல்லியிருக்கிறேன் கடனுறுதிசீட்டின் எழுத்துக்காரர் ஞானசேகர் அல்ல மற்றொரு நண்பர் தாமரைச்செல்வன் எழுதினார். புரோநோட்டில் எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. தாமரைச்செல்வன் எழுதிய மைக்கும், என்னுடைய கையொப்பம் உள்ள மைக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். புரோநோட்டை பூர்த்தி செய்யும்போது நான் இல்லை என்றும் பூர்த்தி செய்யும்போது நான் இருந்திருந்தால் அதே மையினால் கையொப்பம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதி விவசாயம் செய்கிறார், பெயிண்டிங் வேலை செய்கிறார். அவர் வருமான வரி செலுத்துகிறாரா என்று எனக்கு தெரியாது. ரூ.12 இலட்சம் ரூபாயில் 500 ரூபாய் நோட்டுகளாக 24 கட்டுகள் கொடுத்தார். கடனுறுதி சீட்டில் ரூபாய் நோட்டில் விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாதி தன் நண்பர்களை வைத்து கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.